DECEMBER 2022 **P/ID 35326/PTL4S**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. ஆற்றுப்படை என்பதில் 'ஆறு' எதைக் குறிக்கிறது?

2. திருமுருகாற்றுப்படையின் முதலடி யாது?

3. 'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்' - தொடர்ப் பொருள் கூறுக.

4. 'கொடுஞ் செலவு எழில்' - பொருள் சுட்டுக.

5. அலமரல் - பொருள் கூறுக.

6. கவின் என்றால் என்ன?

7. கணங்கொள் கூளி - எவை?

8. கராம் என்பது எது?

9. கொண்டூ என்பது யாது?

10. கண்ணி, கோதை ஆகியன குறித்துப் பட்டினப்பாலை கூறுவது யாது?

11. மதுரைக்காஞ்சியின் ஆசிரியர் பற்றி நீர் அறிவன யாவை?

12. மனையுறை புறவு - பொருள் சுட்டுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. 'காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர்' என்னும் நக்கீரரின் பாராட்டுரையை விளக்குக.

14. முல்லைப்பாட்டின் தொடக்கப் பகுதி எந்தக் கடவுளைப் பரவுகின்றது?

15. பெருமுது பெண்டிர் விரிச்சி நின்ற பாங்கைப் பகர்க.

16. குறிஞ்சிப் பாட்டுத் தோழியின் கருத்துப் புலப்பாட்டுத் திறனை எடுத்துரைக்க.

17. பொய்யாக் காவிரி என்று பட்டனப்பாலை கூறுவதை விளக்குக.

18. பாண்டியனின் யானைப்படை எத்தகையது?

19. மழைப் பொழிவு குறித்து நெடுநல்வாடை கூறுவது யாது?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. ஆற்றுப்படை நூல்களைச் சுற்றுலா வழிகாட்டி நூல்களாக ஏற்கலாமா?

21. 'ஆவினன்குடி அசைதலும் உரியன்' - விளக்குக.

22. 'எமியேம் துணிந்த ஏமஞ்சால் அருவினை' என்று குறிஞ்சிப் பாட்டுத் தோழி விவரிப்பது யாது?

23. மதுரைக் காஞ்சியில் காட்சி வருணனை அமைந்துள்ளதை எடுத்துரைக்க.

24. நெடுநல்வாடையின் திணை, துறை ஆகியவற்றைச் சான்றுகாட்டி விளக்குக.

———————